14th February 1959]

MR. SPEAKER : இதற்கு தனி கேள்வி போட வேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆங்கிலத்தில் தேர்வு அடைய 40 பர்செண்ட் வேண்டும் என்று நினைக்கிறேன். மற்றவைகளில் 30 அல்லது 35 பர்செண்ட் என்று நினைக்கிறேன். தனியாக கேள்வி போட்டால் விவரம் சேகரித்துச் சொல்லுகிறேன்.

SRI A. VEDARATHNAM : ஆங்கிலத்தில் திறமையாக போதனை நடைபெறுவதற்காக செய்யப்படுகிற முயற்சிகள் என்ன, அதன் திட்டம் என்ன என்பதை அறிவிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது பல ஆரம்பப் பள்ளிக் கூட ஆசிரியர்களையும் உயர்தரப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களையும் கொண்ட ஒரு செமினார் நடத்த அங்கே ஆங்கில போதனையில் வல்லவர்களைக் கொண்டு அவர்களுக்கு ஆங்கிலத்தில் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அத்துடன் ஆங்கிலத்தில் நல்ல முறையில் பயிற்சி அளிக்கக்கூடிய ஆசிரியர்களைக் கொண்டு போதனை செய்து அவைகளை கிராமபோன் ரிகார்டுகளில் எடுத்து அதன்மூலமாக பாடங்களைச் சொல்லிக் கொடுக்கவும் ஏற்பாடுகள் நடந்து கொண்டு வருகின்றன.

SRI S. NAGARAJA MONIGAR : சார், இம்மாதிரி சமீப காலத்தில் ஆங்கிலத்தின் தரம் குறைவாகப் போனதன் காரணம் இதர ' பாரங்களில் ' தமிழிலேயோ அல்லது பிராந்திய மொழியிலேயோ போதிப்பதும், மற்ற மொழிகளின் மீது ஒரு வெறுப்பை ஏற்படுத்தியதும் தான் காரணம் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : போதனு மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பதில் சர்ச்சை இல்லை. எந்த மொழியில் பயிலுவதாக இருந்தாலும் அந்த மொழியில் ஒரு தரம் இருக்க வேண்டும் என்று விதி வைத்திருக்கிறோம். அந்தத் தரத்திற்கு வரக்கூடிய அளவுக்குப் போதனை செய்ய வேண்டும் என்று முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

SRI T. S. RAMASWAMY PILLAI : ஆங்கில போதனை சரியானபடி நடப்பதற்கு அரசாங்கம் நல்ல பிழையற்ற பாட புத்தகங்களை வெளியிட உத்தேசித்திருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது பாட புஸ்தகங்களில் அதிகமாகப் பிழை இருக்கும் காரணத்தால் தரம் குறைந்து விட்டது என்று சொல்ல முடியாது. போதிப்பதிலே சில குறைகள் இருப்பதால் தரம் குறைந்து விட்டது என்று கருதப்படுகிறது. ஆகையால் இப்பொழுது அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது 5-ம் வகுப்பில் இருந்தே ஆங்கிலம் சொல்லித்தர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இப்பொழுது தயார் செய்துள்ள புதிய பாடத் திட்டத்தை ரொம்பவும் சிறந்தது என்று எல்லா ஆங்கில நிபுணர்களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

Water-supply Scheme for Tenkasi

* 323 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the stage at which the work of Tenkasi Water-supply Scheme is; and

(*b*) whether the work is progressing according to schedule?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Eighty per cent of the work of laying of conveying mains forming the first stage of the scheme has been completed.

[14th February 1959

(*b*) The work on the scheme has since been deferred pending investigation of a source that will not affect the Courtallam waterfalls.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த "சோர்ஸ்" கண்டு பிடிப்பதில் தென்காசியில் இருந்து மற்றொரு திட்டம் சர்க்கார் முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதா ? அது அங்கீகரிக்கப்படுமா ?

THE HON. SRI M. MANICKAVELU : இதைப் பற்றியெல்லாம் பரிசீலனை செய்துதான் ஒரு முடிவுக்கு வர முடியும்.

Palar Mills, Walajabad

* 324 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there was a lay-off in Palar Mills, Walajabad, due to electricity cut during June and July 1958; and

(*b*) if so, whether any lay-off compensation was paid to the workers for the abovesaid period?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Lay-off compensation was paid to all the workers who are eligible for such compensation under the Industrial Disputes Act.

SRI N. K. PALANISAMI : 240 நாட்கள் தொடர்ந்து வேலை செய்தால் இந்த நஷ்ட ஈடு கொடுக்கப்படும் என்று இருக்கும்போது, தொடர்ந்து 10, 15 வருஷங்கள் வேலை செய்தவர்களுக்கு இந்த நஷ்ட ஈடு கொடுக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 240 நாட்கள் வேலை செய்தவர்கள் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி யாருக்காவது கொடுக்கப்படாமல் இருக்கிறது என்று எந்தக் 'கேஸூம்' சர்க்கார் கவனத்திற்கு வரவில்லை.

Caste Hindu-Harijan Couples

* 325 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் வருஷம் அரிஜன ஜாதி ஹிந்து கலப்பு மண தம்பதிகள் எத்தனை பேர்கள் எதிர்கால வாழ்க்கைக்காக உதவி கோரி கவர்ன்மெண்டுக்கு விண்ணப்பித்தார்கள் ?

(ஆ) எத்தனை பேர்களுக்கு என்னென்ன உதவிகள் அளிக்கப்பட்டன ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) None, Sir.

(*b*) Does not arise.

SRI S. B. ADITYAN : கலப்புத் திருமணங்களைச் சர்க்கார் ஆதரிக்கிறதா ? அப்படியானால் என்னென்ன வகையில் ஆதரிக்கிறது என்று தெரியப்படுத்துமா ?

THE HON. SRI P. KAKKAN : தனிக்கேள்வி போட்டால் எல்லா விவரங்களும் விவரமாகச் சொல்லப்படும்.